**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திருமதி.P.சுபாஷினி, பி.ஏ., பி.எல்.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2022 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள் புதன்கிழமை
**ஐ.ஏ.எண்.05/2022 இன் அ.வ.எண்.358/2021**

ஆறுமுகம் ... மனுதாரர்/ 2–ம் பிரதிவாதி

/ எதிர் /

ராஜசிம்மன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது கடந்த 29.03.2022 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.E.N.துரை அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.அழகேஸ்வரன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட..

**ஆணையுரை**

இம்மனுவானது, அசல் வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11(b) பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)மனுதாரர்களின் மனு சங்கதியின் சுருக்கம் :**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதி ஆவார். இம்மனுவானது அசல் வழக்கினை நிராகரிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் சொல்லப்பட்டுள்ள உறவு முறை தவறாகும். 6–ம் பிரதிவாதி மனுதாரரின் மனைவி ஆவார். மேலும், 7,8 பிரதிவாதிகள் மனுதாரர் மற்றும் 6–ம் பிரதிவாதியின் வாரிசுகள் ஆவார்கள். எதிர்மனுதாரர் ராதாமணி என்பவரின் மகனாவார். 1–ம் பிரதிவாதிக்கும், அவரது மனைவியான

ராதாமணிக்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டால் எதிர்மனுதாரரின் தாயாரான ராதாமணி மற்றும் 1-ம் பிரதிவாதி இருவரும் சேர்ந்து ஒத்திசைவு விவாகரத்து கோரி மனுதாக்கல் செய்து மேற்படி மனுவானது 24.01.1983-ம் தேதியில் அனுமதிக்கப்பட்டது. 9 முதல் 15 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு தொடர்பில்லாத நபர்கள் ஆவார்கள். அவர்கள் இவ்வழக்கினை பொறுத்து தேவையற்ற தரப்பினர்கள் ஆவார்கள். எதிர்மனுதாரர் அசல்வழக்கினை எதிர்மனுதாரர் மட்டுமே 1-ம் பிரதிவாதியின் ஒரே சட்டப்படியான வாரிசு என்று விளம்புகை பரிகாரம் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்களானது 1-ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். அதில் 1-ம் பிரதிவாதியை தவிர வேறுயாருக்கும் உரிமை இல்லை. 1-ம் பிரதிவாதி அவரது சொத்துக்களை 4 மற்றும் 5 பிரதிவாதிகளின் பெயருக்கு 09.01.2012 தேதியில் செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார். மேற்படி ஆவணம் ஏற்பட்ட பிறகு 4 மற்றும் 5 பிரதிவாதிகள் 07.04.2021 தேதியில் தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தியுள்ளனர். அதன்படி 4 மற்றும் 5 பிரதிவாதிகளே அவரவர் சொத்துக்களில் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளனர். மேற்படி சொத்துக்களை வங்கியில் அடமானம் வைத்து அடமான கடன் பெற்றுள்ளனர். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் பாகப்பிரிவினை பத்திரம் பற்றி எதிர்மனுதாரருக்கு நன்கு தெரியும். மேற்படி ஆவணங்கள் இயற்றப்பட்ட தேதியில் எதிர்மனுதாரருக்கு எந்தவொரு உரிமையோ, பாத்தியமோ இல்லாத காரணத்தால் அதைப்பொறுத்து எதிர்மனுதாரர் எந்தகேள்வியும் கேட்க இயலாது. 09.01.2012-ல் இயற்றப்பட்ட ஆவணத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர எதிர்மனுதாரர் காலவரையறைச்சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளார். மனுதாரரின் குடும்பத்தை துன்புறுத்துவதற்காகவே இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு மூலம் தவறாக உள்ளது. வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கு மூலம் இல்லை. எனவே, அசல் வழக்கானது நிராகரிக்கப்பட வேண்டும்.

3) <u>எதிர்மனுதாரரின் எதிருரை சங்கதியின் சுருக்கம்</u> :

மனுதாரரின் மனு பொய்யும், மோசடியானதும், சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1–ம் பிரதிவாதிக்கும், அவரது மனைவிக்கும் ஒத்திசைவின் அடிப்படையில் விவகாரத்து வழங்கப்பட்டுள்ளது என்பதையும், 9 முதல் 15 பிரதிவாதிகள் வழக்கிற்கு தேவையற்ற நபர்கள் என்பதையும், மனுதாரரே நிரூபிக்க வேண்டும். 1–ம் பிரதிவாதி 4,5 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தையும், 4,5 பிரதிவாதிகள் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தை பொறுத்தும், தாவா சொத்துக்களில் 1–ம் பிரதிவாதிகளை தவிர வேறுயாருக்கும் உரிமை இல்லை என்றும், மனுதாரரே நிரூபிக்கவேண்டும். தாவா சொத்துக்களில் 4,5 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பதையும், தாவா சொத்தினை வங்கியில் அடமானம் வைத்து கடன்பெற்றுள்ளார்கள் என்பதையும் மனுதாரரே நிரூபிக்க வேண்டும். விளம்புகை பரிகாரம் கோரும் ஆவணத்தைப் பொறுத்து அது இயற்றப்பட்ட தேதியிலிருந்து 3 வருடங்களுக்குள் வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும் என்று மனுதாரர் கூறுவது மறுக்கப்படுகிறது. 1–ம் பிரதிவாதி எழுதிவைத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தில் மனுதாரரின் சட்டஉரிமை பாதிக்கப்பட்டுள்ளதால் அதைப்பொறுத்துவழக்கு தாக்கல் செய்ய எதிர்மனுதாரருக்கு உரிமையுள்ளது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 11–ன் கீழான நிபந்தனையில் வரவில்லை. மனுதாரர் எழுதிவைத்துள்ள ஆவணங்களில் எதிர்மனுதாரரின் சட்டஉரிமை பாதிக்கப்பட்டுள்ளதால் அதைப்பொறுத்து அசல்வழக்கின் விசாரணையின் முடிவிலேயே தீர்வு காணஇயலும். எதிர்மனுதாரர் அசல்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பது

சரியல்ல. எனவே, மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

6) <u>பிரச்சினை</u> :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.39** வரையான ஆவணங்களும், எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.ஆ.1** முதல் **எ.ம.சா.ஆ.14** வரையான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1** ஆக 22.08.1982 தேதியிட்ட முத்துச்சாமி மற்றும் நடராஜன் ஆகியோரிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்று நகலாகவும், **ம.சா.ஆ.2** ஆக 16.02.1983 தேதியிட்ட ரங்கநாயகியம்மாள் மற்றும் சாவித்திரியம்மாள் முத்துச்சாமிக்கு ஆதரவாக எழுதி கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்று நகலாகவும், **ம.சா.ஆ.3** ஆக 16.11.1983 தேதியிட்ட பழனிவேலு என்பவர் முத்துச்சாமிக்கு வழங்கிய கிரையப்பத்திரத்தின் சான்று நகலாகவும், **ம.சா.ஆ.4** ஆக 29.08.1985 தேதியிட்ட ரங்கசாமி என்பவர் முத்துச்சாமிக்கு வழங்கிய கிரையப்பத்திரத்தின் சான்று நகலாகவும், **ம.சா.ஆ.5** ஆக 12.04.1991 தேதியிட்ட வேணுகோபால் என்பவர் வழங்கிய கிரையப்பத்திரத்தின் சான்று நகலாகவும், **ம.சா.ஆ.6** ஆக 15.07.1991 தேதியிட்ட முத்துச்சாமி மற்றும் பழனிச்சாமி கவுண்டருக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்று நகலாகவும், **ம.சா.ஆ.7** ஆக 28.02.1992 தேதியிட்ட முத்துச்சாமி மற்றும் பழனிச்சாமி கவுண்டரிடையே ஏற்பட்ட கிரையப்பத்திரத்தின் சான்று நகலாகவும், **ம.சா.ஆ.8** ஆக 10.03.1997 தேதியிட்ட கிருஷ்ணசாமி, முத்துலட்சுமி (எ) மணி மற்றும் அவர்களின் மகன்கள் வீரகுமாரசாமி மற்றும் சிவகந்தசாமி ஆகியோர் முத்துச்சாமிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்று

நகலாகவும், **ம.சா.ஆ.9** ஆக 26.03.1997 தேதியிட்ட கணேஷ்மணி மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோர் முத்துச்சாமிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்று நகலாகவும், **ம.சா.ஆ.10** ஆக 09.07.1997 தேதியிட்ட முத்தம்மாள், ரங்கரத்தினம், குருநாதன் மற்றும் ஜோதிமணி ஆகியோர் முத்துச்சாமிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்று நகலாகவும், **ம.சா.ஆ.11** ஆக 10.05.2006 தேதியிட்டு மயில்சாமிகவுண்டர் முத்துச்சாமிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்று நகலாகவும், **ம.சா.ஆ.12** ஆக 07.04.2021 தேதியிட்டு பத்திர எண்.1259/2021 என்ற எண்ணாக செல்வராஜ் மற்றும் சிவகுமார் ஆகியோரிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்று நகலாகவும், **ம.சா.ஆ.13** ஆக 07.04.2021 தேதியிட்டு பத்திர எண்.1265/2021 என்ற எண்ணாக செல்வராஜ் மற்றும் சிவகுமார் ஆகியோரிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்று நகலாகவும், **ம.சா.ஆ.14** ஆக 29.03.2022 தேதியிட்டு அவலப்பம்பட்டி கிராமத்தில் உள்ள புல எண்கள்.100/1, 110, 14,16 63/2A2, 98/1 மற்றும் 99/1-ன் கணினி சிட்டா நகலாகவும், **ம.சா.ஆ.15** ஆக 29.03.2022 தேதியிட்டு பெரிய நெகமம் கிராமத்தில் உள்ள புல எண்.129/2-ன் கணினி சிட்டா நகலாகவும், **ம.சா.ஆ.16** ஆக 29.03.2022 தேதியிட்டு கொண்டேகவுண்டன்பாளையம் கிராமத்தில் உள்ள புல எண்கள்.225/10A1, 225/10A4, 225/10A5 மற்றும் 226/6-ன் கணினி சிட்டா நகலாகவும், **ம.சா.ஆ.17** ஆக 29.03.2022 தேதியிட்டு A.நாகூர் கிராமத்தில் உள்ள புல எண்.23/3C1B-ன் கணினி சிட்டா நகலாகவும், **ம.சா.ஆ.18** ஆக 29.03.2022 தேதியிட்டு பெரிய நெகமம் கிராமத்தில் உள்ள புல எண்.129/3-ன் கணினி சிட்டா நகலாகவும், **ம.சா.ஆ.19** ஆக 29.10.2018 தேதியிட்ட அடங்கல் அசலாகவும், **ம.சா.ஆ.20** ஆக 29.10.2018 தேதியிட்ட அடங்கல் அசலாகவும், **ம.சா.ஆ.21** ஆக கந்தசாமி முத்துசாமியின் ஆதார் அடையாள அட்டை சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.22** ஆக துரைசாமி தமிழரசி என்பவரின் ஆதார் அடையாள அட்டை சான்றிட்ட

நகலாகவும், **ம.சா.ஆ.23** ஆக செல்வராஜ் என்பவரின் பிறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.24** ஆக சிவகுமார் என்பவரின் பிறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.25** ஆக செல்வராஜ் என்பவரின் ஆதார் அடையாள அட்டை சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.26** ஆக சிவகுமார் என்பவரின் ஆதார் அடையாள அட்டை சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.27** ஆக முத்துச்சாமி குடும்ப அட்டை சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.28** ஆக கந்தசாமி முத்துசாமி என்பவரின் பான் கார்டு சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.29** ஆக துரைசாமி தமிழரசியின் பான் கார்டு சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.30** ஆக செல்வராஜின் பான் கார்டு சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.31** ஆக சிவகுமாரின் பான் கார்டு சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.32** ஆக செல்வராஜின் ஓட்டுநர் உரிமம் சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.33** ஆக சிவகுமாரின் ஓட்டுநர் உரிமம் சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.34** ஆக முத்துசாமி பெயருக்கு வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.35** ஆக தமிழரசி பெயருக்கு வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.36** ஆக சிவகுமார் பெயருக்கு வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.37** ஆக 05.04.2010 தேதியிட்டு செல்வராஜ் மற்றும் நர்மதாசரஸ்வதி ஆகியோரின் திருமண பதிவு சான்றின் சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.38** ஆக 14.12.2018 தேதியிட்டு சிவகுமார் மற்றும் மோகனசுந்தரி ஆகியோரின் திருமண பதிவு சான்றின் சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.39** ஆக செல்வராஜ் என்பவருக்கு கோயமுத்தூர், சின்னவேடம்பட்டி, குமரகுரு காலேஜ் ஆப் டெக்னாலஜி வழங்கிய மாற்று சான்றிதழ் சான்றிட்ட நகலாகவும் குறியீடு செய்யப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.ஆ.1** ஆக எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை ஒளிநகலாகவும், **எ.ம.சா.ஆ.2** ஆக 20.09.2012 தேதியிட்டு ஆறுமுகம் மற்றும் தமிழரசி ஆகியோரின் திருமண பதிவு சான்றிதழின் சான்றிட்ட நகலாகவும்,

**எ.ம.சா.ஆ.3** ஆக 24.01.1983 தேதியிட்ட உடுமலைபேட்டை சார்பு நீதிமன்றத்தில் HMOP 31/1982 வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாணையாகவும், **எ.ம.சா.ஆ.4** ஆக 08.08.2017 தேதியிட்டு ராதாமணி இறந்ததற்காக இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகலாகவும், **எ.ம.சா.ஆ.5** ஆக 25.10.2021 தேதியிட்டு ஆவண எண்.2025/2008–ற்கு தமிழ்நாடு அரசு பதிவுத்துறையால் வழங்கப்பட்ட சொத்து தொடர்பான வில்லங்கச் சான்று நகலாகவும், **எ.ம.சா.ஆ.6** ஆக 25.10.2021 தேதியிட்டு ஆவண எண்.1581/2008–ற்கு தமிழ்நாடு அரசு பதிவுத்துறையால் வழங்கப்பட்ட சொத்து தொடர்பான வில்லங்கச் சான்று நகலாகவும், **எ.ம.சா.ஆ.7** ஆக 25.10.2021 தேதியிட்டு ஆவண எண்.195/2012–ற்கு தமிழ்நாடு அரசு பதிவுத்துறையால் வழங்கப்பட்ட சொத்து தொடர்பான வில்லங்கச் சான்று நகலாகவும், **எ.ம.சா.ஆ.8** ஆக 09.01.2012 தேதியிட்டு பெரியநெகமம் கிராமத்தில் உள்ள சொத்தை முத்துச்சாமிகவுண்டர் அவரது மக்கள் செல்வராஜ் மற்றும் சிவகுமாருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகலாகவும், **எ.ம.சா.ஆ.9** ஆக 09.01.2012 தேதியிட்டு கொண்டேகவுண்டன்பாளையம் கிராமத்தில் உள்ள சொத்தை முத்துச்சாமிகவுண்டர் அவரது மக்கள் செல்வராஜ் மற்றும் சிவகுமாருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகலாகவும், **எ.ம.சா.ஆ.10** ஆக 09.01.2012 தேதியிட்டு ஆவலப்பம்பட்டி கிராமத்தில் உள்ள சொத்தை முத்துச்சாமிகவுண்டர் அவரது மக்கள் செல்வராஜ் மற்றும் சிவகுமாருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகலாகவும், **எ.ம.சா.ஆ.11** ஆக 07.04.2021 தேதியிட்டு முத்துச்சாமிகவுண்டர் அவரது மக்கள் செல்வராஜ் மற்றும் சிவக்குமார் ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த பிழைத்திருத்தல் ஆவணம் சான்றிட்ட நகலாகவும், **எ.ம.சா.ஆ.12** ஆக 07.04.2021 தேதியிட்டு செல்வராஜ் மற்றும் சிவக்குமார் ஆகிய இருவரும் சேர்ந்து செய்துகொண்ட பாகசாசனப் பத்திரத்தின் சான்று நகலாகவும், **எ.ம.சா.ஆ.13** ஆக 07.07.2021 தேதியிட்ட Memorandum of

deposit of title deeds–ன் சான்றிட்ட நகலாகவும், **எ.ம.சா.ஆ.14** ஆக 07.07.2021 தேதியிட்ட Memorandum cum deed for deposit of title deeds–ன் சான்றிட்ட நகலாகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மனுவானது அசல் வழக்கை நிராகரிக்க வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் அவர் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்தை வேறுஒருவருக்கு ஆவணம் எழுதிவைப்பதை யாரும் கேள்வி கேட்க இயலாது என்றும், மேற்படி ஆவணத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்றும், வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், வழக்கானது காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், 6 முதல் 15 பிரதிவாதிகள் வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றும், அதனால் அசல் வழக்கினை நிராகரிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் மனுதாரரின் மகன் என்றும், அவரது சட்டஉரிமை மனுதாரர் எழுதிவைத்த ஆவணத்தின் மூலம் மறுக்கப்பட்டுள்ளதால் வழக்கு தாக்கல் செய்ய எதிர்மனுதாரருக்கு உரிமை உள்ளது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது.

அசல்வழக்கின் தன்மையை பரிசீலனை செய்யும் போது மனுதாரர் எதிர்மனுதாரரின் தகப்பனார் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. 1–ம் பிரதிவாதி 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் பிழை திருத்தல் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாகவும், 1–ம் பிரதிவாதி மனுதாரரின் சகோதரர் என்றும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் 1–ம் பிரதிவாதிக்கும், 3–ம் பிரதிவாதிக்கும் பிறந்தவர்கள் என்றும், 1ம் பிரதிவாதி அவருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து எவ்வாறு பாராதீனம் செய்வது என்று எதிர்மனுதாரர் கூறுஇயலாது என்றும், தாவா சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்களா அல்லது சுய சம்பாத்திய

சொத்துக்களா என்று வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றும் வழக்கு தாக்கல் செய்வதற்கு எதிர்மனுதாரருக்கு வழக்கு மூலம் இல்லை என்றும், வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் 3–ம் பிரதிவாதியின் உறவுமுறையானது சந்தேகத்தின் அடிப்படையில் உள்ளது என்றும், 3–ம் பிரதிவாதி 2–ம் பிரதிவாதியின் மனைவி என்று தெரிவிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எ.மா.சா.ஆ.2 ஆவணம் பரிசீலனை செய்யப்பட்டது. அது திருமண சான்றிதழாக காணப்படுகிறது. அதில் கணவரின் பெயர் என்ற இடத்தில் ஆறுமுகம் என்ற பெயரும், மனைவி என்ற இடத்தில் தமிழரசி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பொறுத்து மனுதாரர் தரப்பில் எந்தவொரு விளக்கமும் அளிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் 3–ம் பிரதிவாதி 1–ம் பிரதிவாதியின் மனைவி என்றும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் 3–ம் பிரதிவாதிக்கும் 1–ம் பிரதிவாதிக்கும் பிறந்த மக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பிலோ, எதிர்மனுதாரர் ஒருவர் மட்டுமே 1–ம் பிரதிவாதிக்கு மகன் என்றும், எதிர்மனுதாரரின் உரிமை பாதிக்கப்பட்டுள்ளதால் எதிர்மனுதாரரின் சட்ட உரிமையை பொறுத்தும், 1–ம் பிரதிவாதி எழுதி வைத்துள்ள ஆவணங்களை பொறுத்தும் விளம்புகை கோருவதாக எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், **ஒரு வழக்கானது எப்போது நிராகரிக்கப்படவேண்டும் என்று உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி** "Or.7 R.11, The plaint shall be rejected in the following cases :

(a) Where it does not disclose a cause of action,

(b) where the relief claimed as undervalued, and the plaintiff, on being required by the Court to correct the valuation within a time to be fixed by the Court, fails to do so;

(c) Where the relief claimed is properly valued but the plaint is written upon paper

insufficiently stamped, and the plaintiff, on being required by the court to supply the requisite stamp-paper within a time to be fixed by the Court, fails to do so,

(d) Where the suit appears from the statement in the plaint to be barred by any law

(e) where is not filed in duplicate

(f) where the plaintiff fails to comply with the provisions of Rule 9 : [Provided that the time fixed by the Court for the correction of the valuation or supplying of the requisite stamp papers shall not be extended unless the Court, for reasons to be recorded, is satisfied that the plaintiff was prevented by any cause of an exceptional nature from correcting the valuation or supplying the requisite stamp-papers, as the case may be, within the time fixed by the court and that refusal to extend such time would cause grave injustice to the plaintiff]

இவ்வழக்கானது கட்டளை 7 விதி 11 (b)–ன் கீழ் நிராகரிக்கப்பட வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டது. கட்டளை 7 விதி 11 (b)–ஆனது ஒரு வழக்கில் கோரப்பட்டுள்ள பரிகாரமானது குறைத்து மதிப்பிடப்பட்டிருந்து, அதனை சரிசெய்வதற்கு நீதிமன்றம் கால அவகாசம் அளித்தும், அது சரிசெய்யப்படவில்லை என்றால் அந்த வழக்கானது நிராகரிக்கப்படலாம் என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் அவ்வாறு வழக்கில் கோரப்பட்டுள்ள பரிகாரத்தின் மதிப்பு பொறுத்து மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்படவில்லை. மேலும், எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வழக்கு மூலம் உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரர் குறிப்பிடும் காலவரையறைச் சட்டத்தின் கீழ் இம்மனுவானது பாதிக்கப்பட்டுள்ளது என்ற சங்கதியானது சட்டம் மற்றும் பொருண்மை கலந்த சங்கதிகள் என்பதால் (Mixed question of fact and law) அதனை அசல்வழக்கின் விசாரணையிலேயே தீர்வு காணஇயலும். மேலும், மனுதாரர் குறிப்பிடும் 6 முதல் 12 பிரதிவாதிகள் அவசியதரப்பினர்களா, இல்லையா என்பதை பொறுத்து அசல்வழக்கின் விசாரணையிலேயே தீர்வுகாணஇயலும்.

மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் அசல்வழக்கின் விசாரணையில் தீர்வு செய்யக்கூடிய சங்கதிகள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும், மனுதாரர் / பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது கட்டளை 7 விதி 11–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குள் இல்லாததாலும், எதிர்மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு வழக்கு மூலம் சரியாக உள்ளதா என்பதையும் அசல் வழக்கில் எதிர்மனுதாரர் கோரும் பரிகாரமானது வழக்கின் விசாரணையின்போது இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் மூலம்தான் அதற்கான உரிய தீர்வினை காண இயலும் என்பதாலும், இச்சூழ்நிலையில் இம்மனுவினை அனுமதிக்க போதிய முகாந்திரம் இல்லை என்று கருதி அதன்படியே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

7) முடிவில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை 2022ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20ம் நாளான இன்று அவையறிய பகரப்பட்டது.

P SUBHASHINI
Digitally signed by P SUBHASHINI
Date: 2022.04.20 17:20:46 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

<u>மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u> :

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 22.08.1982 | முத்துச்சாமி மற்றும் நடராஜன் ஆகியோரிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.2 | 16.02.1983 | ரங்கநாயகியம்மாள் மற்றும் சாவித்திரியம்மாள் முத்துச்சாமிக்கு ஆதரவாக எழுதி கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்று நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.3 | 16.11.1983 | பழனிவேலு என்பவர் முத்துச்சாமிக்கு வழங்கிய கிரையப்பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.4 | 29.08.1985 | ரங்கசாமி என்பவர் முத்துச்சாமிக்கு வழங்கிய கிரையப்பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.5 | 12.04.1991 | வேணுகோபால் என்பவர் வழங்கிய கிரையப்பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.6 | 15.07.1991 | முத்துச்சாமி மற்றும் பழனிச்சாமி கவுண்டருக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.7 | 28.02.1992 | முத்துச்சாமி மற்றும் பழனிச்சாமி கவுண்டரிடையே ஏற்பட்ட கிரையப்பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.8 | 10.03.1997 | கிருஷ்ணசாமி, முத்துலட்சுமி (எ) மணி மற்றும் அவர்களின் மகன்கள் வீரகுமாரசாமி மற்றும் சிவகந்தசாமி ஆகியோர் முத்துச்சாமிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.9 | 26.03.1997 | கணேஷ்மணி மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோர் முத்துச்சாமிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.10 | 09.07.1997 | முத்தம்மாள், ரங்கரத்தினம், குருநாதன் மற்றும் ஜோதிமணி ஆகியோர் முத்துச்சாமிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.11 | 10.05.2006 | மயில்சாமிகவுண்டர் முத்துச்சாமிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.12 | 07.04.2021 | பத்திர எண்.1259/2021 என்ற எண்ணாக செல்வராஜ் மற்றும் சிவகுமார் ஆகியோரிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.13 | 07.04.2021 | பத்திர எண்.1265/2021 என்ற எண்ணாக செல்வராஜ் மற்றும் சிவகுமார் ஆகியோரிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.14 | 29.03.2022 | அவலப்பம்பட்டி கிராமத்தில் உள்ள புல எண்கள்.100/1, 110, 14,16 63/2A2, 98/1 மற்றும் 99/1–ன் கணினி சிட்டா நகல் |
| ம.சா.ஆ.15 | 29.03.2022 | பெரிய நெகமம் கிராமத்தில் உள்ள புல எண்.129/2 ன் கணினி சிட்டா நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.16 | 29.03.2022 | கொண்டேகவுண்டன்பாளையம் கிராமத்தில் உள்ள புல எண்கள்.225/10A1, 225/10A4, 225/10A5 மற்றும் 226/6–ன் கணினி சிட்டா நகல் |
| ம.சா.ஆ.17 | 29.03.2022 | A.நாகூர் கிராமத்தில் உள்ள புல எண்.23/3C1B–ன் கணினி சிட்டா நகல் |
| ம.சா.ஆ.18 | 29.03.2022 | பெரிய நெகமம் கிராமத்தில் உள்ள புல எண்.129/3 ன் கணினி சிட்டா நகல் |
| ம.சா.ஆ.19 | 29.10.2018 | அடங்கல் அசல் |
| ம.சா.ஆ.20 | 29.10.2018 | அடங்கல் அசல் |
| ம.சா.ஆ.21 | | கந்தசாமி முத்துசாமியின் ஆதார் அடையாள அட்டை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.22 | | துரைசாமி தமிழரசி என்பவரின் ஆதார் அடையாள அட்டை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.23 | | செல்வராஜ் என்பவரின் பிறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.24 | | சிவகுமார் என்பவரின் பிறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.25 | | செல்வராஜ் என்பவரின் ஆதார் அடையாள அட்டை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.26 | | சிவகுமார் என்பவரின் ஆதார் அடையாள அட்டை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.27 | | முத்துச்சாமி குடும்ப அட்டை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.28 | | கந்தசாமி முத்துசாமி என்பவரின் பான் கார்டு சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.29 | | துரைசாமி தமிழரசியின் பான் கார்டு சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.30 | | செல்வராஜின் பான் கார்டு சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.31 | | சிவகுமாரின் பான் கார்டு சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.32 | | செல்வராஜின் ஓட்டுநர் உரிமம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.33 | | சிவகுமாரின் ஓட்டுநர் உரிமம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.34 | | முத்துசாமி பெயருக்கு வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.35 | | தமிழரசி பெயருக்கு வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.36 | | சிவகுமார் பெயருக்கு வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.37 | 05.04.2010 | செல்வராஜ் மற்றும் நர்மதாசரஸ்வதி ஆகியோரின் திருமண பதிவு சான்றின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.38 | 14.12.2018 | சிவகுமார் மற்றும் மோகனசந்தரி ஆகியோரின் திருமண பதிவு சான்றின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.39 | | செல்வராஜ் என்பவருக்கு கோயமுத்தூர், சின்னவேடம்பட்டி, குமரகுரு காலேஜ் ஆப் டெக்னாலஜி வழங்கிய மாற்று சான்றிதழ் சான்றிட்ட நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | | எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.2 | 20.09.2012 | ஆறுமுகம் மற்றும் தமிழரசி ஆகியோரின் திருமண பதிவு சான்றிதழின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 24.01.1983 | உடுமலைபேட்டை சார்பு நீதிமன்றத்தில் HMOP 31/1982 வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாணை |
| எ.ம.சா.ஆ.4 | 08.08.2017 | ராதாமணி இறந்ததற்காக இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 25.10.2021 | ஆவண எண்.2025/2008-ற்கு தமிழ்நாடு அரசு பதிவுத்துறையால் வழங்கப்பட்ட சொத்து தொடர்பான வில்லங்கச் சான்று நகல் |
| எ.ம.சா.ஆ.6 | 25.10.2021 | ஆவண எண்.1581/2008-ற்கு தமிழ்நாடு அரசு பதிவுத்துறையால் வழங்கப்பட்ட சொத்து தொடர்பான வில்லங்கச் சான்று நகல் |
| எ.ம.சா.ஆ.7 | 25.10.2021 | ஆவண எண்.195/2012-ற்கு தமிழ்நாடு அரசு பதிவுத்துறையால் வழங்கப்பட்ட சொத்து தொடர்பான வில்லங்கச் சான்று நகல் |
| எ.ம.சா.ஆ.8 | 09.01.2012 | பெரியநெகமம் கிராமத்தில் உள்ள சொத்தை முத்துச்சாமிகவுண்டர் அவரது மக்கள் செல்வராஜ் மற்றும் சிவகுமாருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.9 | 09.01.2012 | கொண்டேகவுண்டன்பாளையம் கிராமத்தில் உள்ள |

| | | |
|---|---|---|
| | | சொத்தை முத்துச்சாமிகவுண்டர் அவரது மக்கள் செல்வராஜ் மற்றும் சிவகுமாருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.10 | 09.01.2012 | ஆவலப்பம்பட்டி கிராமத்தில் உள்ள சொத்தை முத்துச்சாமிகவுண்டர் அவரது மக்கள் செல்வராஜ் மற்றும் சிவகுமாருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.11 | 07.04.2021 | முத்துச்சாமிகவுண்டர் அவரது மக்கள் செல்வராஜ் மற்றும் சிவக்குமார் ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த பிழைத்திருத்தல் ஆவணம் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.12 | 07.04.2021 | செல்வராஜ் மற்றும் சிவக்குமார் ஆகிய இருவரும் சேர்ந்து செய்துகொண்ட பாகசாசனப் பத்திரத்தின் சான்று நகல் |
| எ.ம.சா.ஆ.13 | 07.07.2021 | Memorandum of deposit of title deeds–ன் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.14 | 07.07.2021 | Memorandum cum deed for deposit of title deeds–ன் சான்றிட்ட நகல் |

<u>**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் பட்டியல் :**</u>

– இல்லை –

P SUBHASHINI
Digitally signed by P SUBHASHINI
Date: 2022.04.20 17:20:59 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.